# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| | | **அரியலூர் நகராட்சியின் அவசரக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 22.11.2019 தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அதுதொடர்பாக கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.** | |
| **22.11.2019** | **157** | சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.07.2018 ஆகியவைகளை நிறுத்தி வைத்து, சொத்துவரி சீராய்விற்கு முந்தைய சொத்து வரியினையே வசூலித்திடவும், சொத்துவரி சீராய்வு குறித்து அரசு செயலாளர் நிதித்துறை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் பேரில் அரசினரால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV ) துறை, நாள் 19.11.2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019ஆம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1ல் குறிப்பிட்டவாறு சொத்துவரி மண்டலங்கள் பகுப்பாய்வு (Zone rate) மற்றும் 2017–18ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு அளவீடுகள் (Under Assessed and Buildings with Changes in usage) ஆகியவைகளையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு பதிவு செய்யலாம் | **அனுமதிக்கப்பட்டது** |